## இந்திய அரசியலமைப்பு- பகுதி - 10

# 10] மாநிலம்

## பாடக்குறிப்புகள்

இந்தியா 29 மாநிலங்கள் மற்றும் 7 யூனியன் பிரதேசங்களைக் கொண்டுள்ளது. மாநில அரசின் கட்டுப்பாட்டில் மாநிலம் செயல்படுகிறது.

மாநில அரசின் அதிகாரங்களையும், பணிகளையும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தெளிவாக விளக்குகிறது. மாநிலப் பட்டியலில் இடம் பெற்றுள்ள துறைகளை நிருவகிக்கும் பொறுப்பு மாநிலங்களைச் சாரும். மைய அரசு போன்று மாநில அரசுகளும் சட்டத்துறை, நிருவாகத்துறை மற்றும் நீதித்துறை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

இந்தப் பகுதியில் மாநிலம் என்பது ஜம்மு காஷ்மீர் பகுதியை உள்ளடக்காது (சரத்து - 156)

### ஆளுநர்

- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு ஆளுநர் இருத்தல் வேண்டும். (சரத்து - 153)
- ஒருவரை 2 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக நியமிக்கப்படலாம் என்று 1956 - ம் ஆண்டு 7 - வது அரசியல் சட்டத் திருத்தத்தின் படி மாற்றம் செய்யப்பட்டது.
- மாநிலங்களின் அரசியலமைப்புத் தலைவர் ஆளுநர்
- தனது நிர்வாக அதிகாரத்தை நேரடியாகவோ அல்லது தனக்கு கீழுள்ள அலுவலர்களின் வாயிலாகவோ செயலுறுத்துவார் (சரத்து - 154 (1)).
- மாநில நிருவாகத்துறை ஆளுநரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அரசியலமைப்புச் சட்டத்தின்படி மாநில அரசின் தலைவர் இவரே, ஆனால் முதலமைச்சர் தலைமையிலான அமைச்சரவையே உண்மையான நிருவாக அமைப்பாகும். இந்த அமைச்சரவை மாநில சட்டப்பேரவைக்கு பொறுப்பானதாகும்.

### ஆளுநர் நியமனம் (சரத்து - 155)

- ஆளுநரை நியமிப்பவர் குடியரசுத் தலைவர்.

### பதவிக்காலம் (சரத்து - 156)

- குடியரசுத் தலைவர் விரும்பும் வரை பதவியில் இருக்கலாம், எனினும் இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.
- ஆளுநர் தனது பதவி விலகல் கடிதத்தைக் குடியரசுத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்
- ஆளுநர் தனது பதவிக்காலம் முடிவடைந்த பின்பும் புதிய ஆளுநர் பதவி ஏற்கும் வரை நீடிக்கலாம்.
- குடியரசுத் தலைவர், பதவிக்காலம் முடியும் முன்பே, ஆளுநரைப் பதவியிலிருந்து நீக்கலாம் அல்லது பதவி நீட்டிப்பு செய்யலாம்.

**ஆளுநர் பதவிக்கான தகுதிகள்: (சரத்து - 157)**

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- 35 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.

**சரத்து - 158**

- ஆளுநர், நாடாளுமன்றத்தின் அவைகளிலோ அல்லது சட்டமன்றத்தின் அவைகளிலோ உறுப்பினராக இருக்கக் கூடாது. அவ்வாறு இருப்பின் ஆளுநராகப் பதவி ஏற்றபோது அந்த உறுப்பினர் பதவி பறிபோய் விடும்.
- மத்திய மற்றும் மாநில அரசில் எந்தப் பதவியிலும் ஊதியம் பெறுபவராக இருக்கக் கூடாது. ஆதாயம் தரும் பதவிகளை ஏதும் வகிக்கக் கூடாது.
- ஆளுநரின் ஊதியம் மற்றும் வசதிகளை நியமிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திடம் உள்ளது.
- அலுவலக குடியிருப்பி பெற உரிமை உண்டு. ஊதியம் மற்றும் பிற வசதிகளை அவரது பதவிக் காலத்தில் குறைத்தல் கூடாது.
- ஒருவர் 2 அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டிருந்தால் குடியரசுத் தலைவர் கூறும் விகிதத்தில் அந்த மாநிலங்கள் ஊதியம் கொடுக்க வேண்டும்.

பதவிப் பிரமாணம் (சரத்து - 159)

- ஆளுநர் உயர் நீதிமன்ற தலமை நீதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- அவர் இல்லையெனில் மூத்த நீதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**சரத்து - 160**

அவசரகாலங்களில் செயல்படும் முறைகளை எவ்வாறு செயல்படுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவர் அறிவுறுத்துவார்.

மன்னிப்பளிக்கும் அதிகாரம் (Pardoning Power - 161)

- மாநில ஆட்சித் துறை வரம்பிற்குட்பட்ட விபரங்கள் சார்ந்த வழக்குகளில் தண்டனை பெற்றவர்களை மன்னிக்கவும், தண்டனையை ஒத்தி வைக்கவும், குறைக்கவும், தள்ளுபடி செய்யவும் ஆளுநருக்கு அதிகாரம் உள்ளது.
- மரண தண்டனை (ம) இராணுவ நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனையில் ஆளுநர் மன்னிப்பு அளிக்க முடியாது.
- மரண தண்டையை நிறுத்தி வைக்கும் அதிகாரம் உள்ளது.
- முதலமைச்சர் மற்றும் அமைச்சரவை ஆலோசனை பேரில், குற்றவியல் நடைமுறை சட்டத்தின்படி, மாநில உயர்நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற குற்றவாளிகளை மன்னிக்கவும், தண்டனையை குறைக்கவும் அல்லது நீக்கவும் ஆளுநர் அதிகாரம் பெற்றுள்ளார். எனினும் தண்டயனையை அதிகப்படுத்த அதிகாஙரங்கள் பெற்றிருக்கவில்லை.

**ஆளுநரின் நிர்வாக அதிகாரம்**

- மாநில சட்டமன்றங்கள் சட்டமியற்றும் அதிகாரம் உள்ள விவரங்கள் வரையில் ஆளுநரின் நிர்வாக அதிகாரம் உள்ளது (சரத்து - 162).
- மாநிலத்தில் அனைத்து உத்தரவுகள், ஆணைகள் ஆளுநரின் பெயரில் உண்டாக்கப்பட வேண்டும்.
- இவ்வதிகாரம் மாநில அமைச்சரவையின் ஆலோசனையின் படி இயங்கும்.
- மாநில அரசின் தலைமை வழக்கறிஞரை நியமனம் செய்கிறது.
- மாநில முதலமைச்சர், மற்ற அமைச்சர்கள், மாநில அரசு முதன்மை வழக்குரைஞர், சட்டமன்றத் தலைவர், சட்டப்பேரவைத் தற்காலிக தலைவர், அரசு பணியாளர் தேர்வு ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்கள் போன்றவர்களை நியமிக்கிறார்.
- மாநில அரசின் செயல்பாடு குறித்து குடியரசுத் தலைவருக்கு அறிக்கைகள் அனுப்புகிறார்.
- மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெறும் போது, மாநில நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்கிறார்.

**நிதித்துறை அதிகாரம் (Financial Powers)**

- ஆளுநரின் பரிந்த்ரை இல்லாமல் பண மசோதா மாநில சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட முடியாது.

- துறைகளுக்கான மானியக் கோரிக்கைகள் ஆளுநரின் பரிந்துரையின் பேரில்தான் பின்னரே சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
- மாநில அரசின் ஆண்டு வரவு - செலவு திட்டம் ஆளுநரின் அனுமதி பெற்ற பின்னரே சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.
- வரவு செலவு திட்டம் (வருடாந்தி நிதி அறிக்கை) என்பது அரசின் ஆண்டு நிதியறிக்கையாகும். இது நடப்பு ஆண்டுக்கான அரசியல் வருவாய் மற்றும் செலவினங்கள் குறித்த அறிக்கையாகும்.
- எதிர்பாராத செலவுகளை மேற்கொள்ள சில்லறை செலவு நிதியிலிருந்து நிதி வழங்கிட அரசியலமைப்புச் சட்டம் ஆளுநருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது.

**சட்டமியற்றல் சார்ந்த அதிகாரம்**

- சட்டமன்றத்தினை கூடுமாறு அழைப்பு விடுப்பது.
- சட்டமன்ற அவைகளை ஒத்திவைக்கவும், சட்டப்பேரவையைக் கலைக்கவும் அதிகாரமுண்டு.
- மாநில சட்டமன்றத்தில் ஒரு அங்கமாக ஆளுநர் திகழ்கிறார்.
- மாநில சட்ட மேலவை (இரண்டாவது அவை) உறுப்பினர்களில் 1/6 பகுதியினரையும், சட்டப்பேரவையில் ஒரு ஆங்கிலோ இந்திய உறுப்பினரையும் நியமனம் செய்கிறார்.
- மாநில சட்டமன்றம் நிறைவேற்றும் எந்தவொரு மசோதாவும் ஆளுநரின் ஒப்புதல் பெற்றப் பின்னரே சட்டமாகும்.

**அவசரச் சட்டம் பிறப்பிக்கும் அதிகாரம் (சரத்து - 213)**

- சட்டமன்றத்தின் ஒரு அவையே அல்லது இரு அவைகளோ கூட்டத் தொடரில் இல்லாத போது உடனடி தேவை இருப்பின் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்காம்.
- சட்டமன்றம் இயற்றும் சட்டங்களைப் போன்ற வலுவும், விளைவுகளையும் கொண்டது.
- ஆனால் சில குறிப்பிட்ட மசோதாக்களை அறிமுகம் செய்ய குடியரசுத் தலைவர் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்று இந்திய அரசியலமைப்பு கூறினால்.அதில் பிறப்பிக்க இயலாது.
- ஆளுநர் பிறப்பிக்கும் அவசரச் சட்டங்கள் சட்டப்பேரவை அல்லது இரு அவைகளின் முன்பு சட்டமன்றம் கூடிய தேதியிலிருந்து 6 வாரங்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
- பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெறும் அதிகாரம் ஆளுநருக்கு உள்ளது.

**குடியரசுத் தலைவர் ஆட்சி (சரத்து - 356)**

- மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து, மாநில அரசு செயல்படமுடியாத நிலையில், அரசியலமைப்பு சட்டப்பிரிவு, 356 - ஐ பயன்னடுத்தி மாநில அரசை கலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சியைப் பிரகடனம் செய்யலாம். இச்சூழ்நிலையில் ஆளுநர் மாநிலத்தில் உண்மையான அதிகாரம் பெற்றுத் திகழ்கிறார். இது குடியரசுத் தலைவர் ஆட்சி என்றழைக்கப்படுகிறது.

**பிற அதிகாரம்**

- மாநில அரசுப்பணி ஆணையத்திடமிருந்து ஆண்டு அறிக்கைகளை பெற்று, சட்டமன்றத்தின் பரிசீலனைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கின்றார்.

**அமைச்சரவை / ஆளுநரின் தன் வருப்புரிமை (சரத்து 163)**

- முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு அமைச்சரவை ஆளுநருக்கு உதவியும் ஆலோசனை வழங்க வேண்டும்
- ஆளுநர் தனது விருப்புரிமை / தன்னுரிமை அதிகாரத்தை பயன்னடுத்தும் பொழுது அவர் அமைச்சரவையின் ஆலைாசனைப்படி செயல்படத் தேவையில்லை.
- ஆளுநர் செயல்படுத்தப்பட்ட செயல்களின் செல்லும் தன்மையை தன் விருப்புரிமை அல்லது தன்விருப்புரிமை இல்லாமல் செயல்பட்டாலர் என வினா எ
  எழுப்ப முடியாது.
- அமைச்சர்களால் ஆளுநருக்கு வழங்கப்பட்ட ஆலோசனையை எந்த நீதிமன்றமும் விசாரணை செய்ய முடியாது.

**தன்னுரிமை அதிகாரத்தினை செயல்படுத்தும் சூழ்நிலைகள்**

| தமிழ் நாட்டில் பதவிகித்த பெண் ஆளுநர் பாத்திமா பீவி |
|---|

1. முதலமைச்சரை நியமனம் செய்யும் பொழுது.
2. ஒரு அமைச்சரை பதவி நீக்கம் செய்யும் பொழுது.
3. சட்டப்பேரவைக் கலைக்கு போது.
4. மாநில நெருக்கடி நிலைமையை சரத்து - 356 -ன் படி பிரகடனப்படுத்த குடியரசுத் தலைவருக்கு அறிக்கை அனுப்பும் போது.
5. மாவட்ட நீதிபதிகளை நியமிக்கும் போது.

- இவ்வாறு செயல்படும் தன்னுரிமை இறுதியானது.

**முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் (சரத்து - 164)**

- மாநில சட்டப்பேரவை தேர்தலில் வெற்றிப் பெற்ற சட்டப்பேரவையில் பெரும்பான்மை உறுப்பினர்களை கொண்ட கட்சித் தலைவரும்,சட்டமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றவருமான ஒருவரை, முதலமைச்சராக ஆளுநர் நியமிப்பார்.
- மற்ற அமைச்சர்கள் முதலமைச்சரின் பரிந்துரையின் பேரில் ஆனுநரால் நியமிக்கப்படுகிறார்.
- சத்தீஸ்கர் (Chhattisgarh), ஜார்கண்ட், மத்திய பிரதேசம், ஒடிசா போன்ற மாநிலங்களில் பழங்குடி நல அமைச்சர் இருக்க வேண்டும்.
- சட்டமன்ற உருப்பினராக இருக்கும் ஒருவர் கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் உறுப்பினரின் தகுதி இழந்தால், அவர் அமைச்சர் பதவிக்கும் தகுதியற்றவர்.
- மாநில அமைச்சரவை சட்டப்பேரவைக்கு கூட்டுப் பொறுப்பு கொண்டுள்ளது.
- முதலமைச்சர் உள்ளிட்ட மாநில அமைச்சரவை, மாநில சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களில் 12 சதவீதத்திற்கு கீழ் அல்லது 15 சதவீத்திற்கு மேல் இருக்கக் கூடாது. என 2003 - ம் ஆண்டு 91 - வது அரசியல் சட்டத்திருத்தத்தினால் செய்யப்பட்ட, (இத்திருத்தம் 01. 01. 2004 முதல் நடைமுறைக்கு வந்தது).
- முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் ஆளுநர் முன்னிலையில் பதவிப் பிரமாணனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.
- சட்டசபையில் உறுபப்பினராக இல்லாத ஒருவர் 6 மாதங்கள் வரை அமைச்சராகவோ அல்லது முதலமைச்சராகவே செயல்படலாம்.
- 6 மாத காலத்திற்குள் சட்டமன்ற உறுப்பினர் பதிவிக்கு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

**சரத்து 166**

- மாநில அரசின் நிர்வாகத் துறை செயல்பாடுகள் அனைத்து ஆளுநரின் பெயரில் நடத்தல் வேண்டும்.

**முதலமைச்சர்**

- மாநிலத்தில் உண்மையான நிருவாக அதிகாரங்களை செயல்படுத்துவது முதலமைச்சர் மற்றும் அவரது தலைமையிலான அமைச்சரவைக்யாகும்.
- ஆளுநரின் பெயரால் மாநில நிருவாகத்தை முதலமைச்சர் மேற்கொள்கிறார்.
- மைய அரசியல் பிரதமரின் நிலையைப் போன்ற மாநில நிருவாகத்தில் முதலமைச்சர் நிலை காணப்படுகிறது.

சட்டப்பேரவையில் எந்தக் கட்ச் அல்லது எந்த அணி பெரும்பான்மை பெற்றுள்ளதோ, அந்தக் கட்சியின் தலைவர் அல்லது அணியின் தலைவரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கிறார். எந்தவொரு கட்சியும் அல்லது அணியும் சட்டப்புரவையில் அறுதிப் பெரும்பான்மையைப் பெறவில்லையெனில், சட்டசபையில் தனிப்பெரும் கட்சியின் தலைவருக்கு அமைச்சரவை அமைக்குமாறு ஆளுநர் அழைப்பு விடுக்கலாம். ஆனால் ஆளுநர் குறிப்பிடும் கால அவகாசத்திற்குள், சட்டப்பேரவையில் தனக்குப் பெரும்பான்மை ஆதரவு உள்ளது என்பதை நிரூப்க்க வேண்டும்.

**முதலமைச்சரின் பதவிக்காலம்**

- நிர்ணயிக்கப்பட்ட தனது சட்டப் பேரவையில் பெரும்பான்மையினர் தனக்கு ஆதரவு கொடுக்கும் வரையில் ஒருவர் முதலமைச்சர் பதவியின் விலகலாம்.
- பொதுவாக முதலமைச்சருக்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பதவிகாலம் 5 ஆண்டுகள் ஆகும்.

**முதலமைச்சரின் கடமைகள் (சரத்து - 167)**

1. மாநில அமைச்சரவை எடுக்கும் எல்லா முடிவுகளையும் ஆளுநரிடம் தொடர்பு கொள்ள வேண்டும்.
2. அரசின் நிர்வாகம் பற்றியோ அல்லது சட்டவரைவு பற்றிய தகவல்களையோ ஆளுநர் வினவும் போது கூற வேண்டும்.
3. ஒரு அமைச்சர் தனிப்பட்ட முடிவினை எடுத்தால் அதை அமைச்சரவையில் தாக்கல் செய்ய ஆளுநர் பணித்தால் அதனை முதலமைச்சர் ஆற்ற வேண்டும்.

**அமைச்சரவைக் குழு**

மைய அமைச்சரவை போன்ற மாநில அமச்சரவையும் உண்மையான அதிகாரம் பெற்றுள்ளது.

- மாநில அமைச்சரவை மாநில சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாகும். அனைத்து அமைச்சர்களும் மாநில மாநில சட்டமன்றத்தின் உறுப்பினர்களாய் இருத்தல் வேண்டும்.
- அனைத்து அமைச்சர்களும், முதலமைச்சரின் தலைமையின் கீழ் ஒரே அணியாகச் செயல்படுகிறது.
- முதலமைச்சர் பதவியில் நீடிக்கும் வரை அமைச்சரவை பதவியில் நீடிக்கும்.
- சட்டப்பேரவையில் அமைச்சரவையின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மான்ம நிறைவேற்றினால், முதலமைச்சர்தலைமையில் செயல்படும் மாநில

அமைச்சரவை பதவி விலக வேண்டும். இது ஒட்டுமொத்த பொறுப்பு என்றழைக்கப்படுகிறது.

**மாநில முதன்மை வழக்குரைஞர் (சரத்து 165)**

- உயர் நீதிமன்ற நீதிபதியாவதற்கு தகுதி பெற்றுள்ள ஒருவரை ஆளுநர் நியமிப்பார்.
- ஆளுநர் விரும்பும் வரையில் இவர் அப்பதவியில் நீடிக்கலாம்.
- மாநில அரசின் முதன்மை வழக்குரைஞரின் மாத ஊதியம் ஆளுநரால் நிர்ணயிக்கப்படும்.
- மாநில அரசுக்கு மற்றும் ஆளுநருக்கு சட்ட ஆலோசனை வழங்குதல்.
- சட்டத் தன்மை வாய்ந்த கடமைகளைச் செய்தல்.
- சட்டமேலவை, சட்டப்லேபரவையில் பேசுவதற்கும் பங்கெடுப்பதற்கும் இவருக்கு உரிமை உண்டு. ஆனால் வாக்களிக்க முடியாது (சரத்து - 177).

**சட்ட மன்ற (சரத்து 168)**

சட்டமன்றம் என்பது ஆளுநர் மற்றும் சட்ட மேலவை (Legislative Council) அல்லது சட்டப்பேரவை (Legislative Assembly) அல்லது இரண்டும் உள்ளடக்கியது.

- ஈரவை சட்டமன்றத்தில் சட்டமேலவை, சட்டப்பேரவை ஆகிய இரண்டும் அவைகள் உள்ளன. இவைகள், மேலவை மற்றும் கீழவை எனப்படும்.
- ஓரவை சட்டமன்றத்தில் சட்டப்பேரவை மட்டுமே உள்ளது. இதுவே கீழவை என்று அழைக்கப்படுகிறது.
- ஆந்திரப்பிரதேசம், பீகார், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகம், மகாராஷ்டிரம் மற்றும் உத்திரப்பிரதேசம், தெலங்கானா ஆகிய மாநிலங்களில் ஈரவை சட்டமன்றம் உள்ளது.

**சரத்து - 169**

- சட்ட மேலவையை உருவாக்கும், நீக்குவதற்கும் அதிகாரம் பெற்றிருப்பது நாடாளுமன்றம், ஆனால் அதற்கான தீர்மானம் அம்மாநில சட்டப்பேரவையில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறைக்காமல் வாக்கெடுப்பில் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும்.

**சட்டப்பேரவையின் உள்ளடக்கம் (சரத்து - 170)**

- ஒருமனிதனின் சட்டப்பேரவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 60 உறுப்பினர்களுக்கு குறையாமலும் 500 உறுப்பினர்களுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

- ஒரு ஆங்கிலோ இந்தியன் உறுப்பினரை ஆளுநர் நியமிப்பார்.
- இந்த உறுப்பினர்களை தேர்வு செய்ய 2001- ல் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி தொகுதிகள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு 2026 வரை பின்பற்றப்படும் என 87 - வது சட்டத் திருத்தம் 2003-ன் படி மாற்றப்பட்டது.
- 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகன் எவரும் உறுப்பினராக ஆகலாம்.
- சட்டப்பேரவைத் தொகுதிகளை மறுசீரமைக்கவோ, மாற்றியமைக்கவோ அதிகாரம் பெற்றது நாடாளுமன்றம்.

**சரத்து - 172**

- இதன் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும். ஆனால் இதன் காலம் முடிவடையும் முன்னரே கலைக்காலம்.
- நெருக்கடி கால நிலை முடிவுக்கு வந்தவுடன் 6 மாதங்களுக்குள் முடிவுறும்.
- சட்ட மேலவையை கலைக்க முடியாது. ஆனால் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை ஒய்வு பெறுநர் (சரத்து - 172),

மாநிலங்களில் சட்டப்பேரவை உண்மையான அதிகார மையமாக திகழ்கிறது. இது குடிமக்களால் நேரடியாகத் தேர்ந் தேடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மக்கள்தொகை அடிப்படையில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எண்ணிக்கை அமைந்திருக்கும்.

சட்டப்பேரவையில், பட்டியல்இனத்தவர்கள் (ஆதிதிராவிடர்) பழங்குடி மக்களுக்கு சில இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை தனித்தொகுதி என அழைக்கப்படுகின்றன.

**சட்டப்பேரவைக்கு உறுப்பினராவதற்கான தகுதிகள் (சரத்து - 173)**

- 25 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- வேறு ஏதேனும் தகுதிகளைச் சேர்க்கும் அதிகாரம் பெற்றது நாடாளுமன்றம் ஆகும்.

**சட்டமேலவை (சரத்து 171)**

- சட்ட மேலவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 40 - க்கு குறையாமரும், சட்டபேரவை உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும்.

**தேர்ந்தெடுக்கும் முறை**

- இதன் உறுப்பினர்களின் மூன்றில் ஒரு பங்கரை (1/3) நகராட்சி மாவட்ட வாரியங்கள் மற்றும் மற்ற உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- மூன்றில் ஒரு பங்கினர் (1/3) சட்டப்பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 12 - ல் ஒரு பங்கினர் (1/12) மூன்றாண்டுகளுக்கு குறைவில்லாத பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- 12 - ல் ஒரு பகுதியினர் (1/12) மூன்றாண்டுகளுக்கு குறைவில்லாத மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- மீத முள்ள உறுப்பினர்கள் (1/6) இலக்கியம், அறிவியல்,கலை, கூட்டுறவு இயக்கம் சமூக சேவையில் உள்ளவர்களை ஆளுநர் நியமிப்பார்.
- மத்திய சட்டமேலவையான மாநிலங்களை போன்ற, மாநிலங்களில் சட்ட மேலமை நிரந்தரமானதாகும்.

**சட்ட மேலவைக்கு உறுப்பினராவதற்கான தகுதிகள் (சரத்து 173)**

- 30 வயது நிரம்பிய இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.
- வேறு ஏதேனும் தகுதிகளைச் சேர்க்கும் அதிகாரம் பெற்றது நாடாளுமன்றம் ஆகும்.
- இவர்களின் பதவிக்காலம் 6 ஆண்டுகள் உறுப்பினர்கள் மறு தேர்தலுக்கும், மறு நியமனத்திற்கும் தகுதி உள்ளவர்கள்.

1986, நவம்பர் 1 -ஆம் தேதி சட்டமேலவை தமிழ்நாட்டில் ஒழிக்கப்பட்டது.

**சட்ட மன்ற கூட்டம், நீட்டிப்பு, கலைப்பு (சரத்து 174)**

- சட்டமன்றத்தின் இரு அவைகளையும் கூட்டும் அதிகாரம் ஆளுநரிடம் உள்ளது.
- ஒரு கூட்டத் தொடருக்கும் அடுத்த கூட்டத்திற்கும் இடைவெளி 6 மாதங்களுக்கு மேல் இருக்கக் கூடாது.
- ஒரு வருத்தில் சட்ட மன்றம் 3 முறை கூடும்.
- சட்டப்பேரவையை கலைக்கும் அதிகாரம் ஆளுநரிடம் உள்ளது.

**ஆளுநர் உரை (சரத்து 175)**

- ஆளுநர் சட்டப்பேரவை அல்லது சடடமேலவை அல்லது இரு அவைகளின் கூட்டு அமர்வில் உரை நிகழ்த்தலாம்.

- சட்டமன்றத்தில் நலுவையில் உள்ள மசோதா தொடரடபாக ஆளுநர் தகவல் அனுப்பலாட்.

**ஆளுநரின் சிறப்பு உரை (சரத்து 176)**

- போதுத் தேர்தல் முடிந்தவுடன் நடக்கும் முதல் கூட்டத்திலும், ஒவ்வொரு வருடத்தின் முதல் கூட்டத்திலும் ஆளுநர் உரை நிகழ்த்துவார்.

**சட்டமேலவைத் தலைவர் (சரத்து 182)**

- சட்டமேலவையை நடத்துபவர் மேலவைத் தலைவர் (Chairperson) ஆவார்.
- மேலவைத்தலைவர், மேலவைத் துணைத்தலைவர் ஆகியோர் மேலவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- மேலவைத் தலைவர் இல்லாத காலங்களில் மேலவைத் துணைத் தலைவர் மேலவை நிகழ்ச்சிகளை நடத்துவார்.

**சபாநாயகர் / பேரவைத் தலைவர்**

- பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோர் சட்டப்பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் (சரத்து - 178).
- சபாநாயகர் அல்லது துணை சபாநாயகர் பதவி காலியானால் அந்த அவை வேறொரு உறுப்பினரை சபாநாயகர் அல்லது துணை சபாநாயகராக தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**சரத்து 179**

- பேரவைத் தலைவர் / பேரவைத் துணைத் தலைவர் தங்களின் உறுப்பினர் பதவி இழந்தால் தனது தலைவர் பதவியும் இழப்பார்.
- பேரவைத் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தைத் துணைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.
- பேரவைத் துணைத் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தை பேரவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.
- இவர்கள் இருவரும் பேரவை உறுப்பினர்களால் பெரும்பான்மைத் தீர்மானத்தின் மூரம் பதவி நீக்கம் செய்யப்படலாம்.ஆனால் அதற்கு முன் 14 நாட்களுக்கு குறையாத அறிவிக்கை செய்ய வேண்டும்.
- சட்டப்பேரவை கலைக்கப்பட்டால் பேரவைத் தலைவர் பதவி விலகத் தேவையில்லை.

**சரத்து 181**

- சபாநாயகரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருக்கும் போது சபாநாயகரும், துணை சபாநாயகரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருக்கும் போது துணை சபாநாயகரும் அவையினை தலைமையேற்று நடத்துதல் கூடாது. ஆனால் அவையில் பேசுவதற்கும், கலந்து கொள்வதற்கும் உரிமை உண்டு.
- முதுர் வாக்கெடுப்பில் வாக்களிக்கலாம்.ஆனால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்படும் போது வாக்களிக்க இயலாது.

**சரத்து 183**

- மேலவைத் தலைவர் / மேலவைத் துணைத் தலைவர் தங்களின் உறுப்பினர் பதவி இழந்தால் தனது தலைவர் பதவியும் இழப்பார்.
- மேலவைத் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தை மேலவைத் துணைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும்.
- மேலவைத் துணைத் தலைவர் தனது பதவி விலகல் கடிதத்தை மேலவைத் தலைவிடம் கொடுக்க வேண்டும்.
- இவர்கள் இருவரும் மேலவை உறுப்பினர்களால் பெரும்பான்மைத் தீர்மானத்தின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படலாம்.ஆனால் அதற்கு முன் 14 நாட்களுக்கு குறையாத அறிவிக்கை செய்ய வேண்டும்.

**சரத்து - 185**

- மேலவைத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் கவனிப்பில் இருக்கும் போது மேலவைத" தீர்மானம் கவனிப்பில் இருக்கும் போது மேலவைத் துணைத் தலைவரும் அவையிணை தலைமையேற்று நடத்தல் கூடாது. ஆனால் அவையில் பேசுவதற்கும், கலந்து கொள்வதற்கும் உரிமை உண்டு.
- முதல் வாக்கெடுப்பில் வாக்களிக்கலாம். ஆனால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்படும்போது வாக்களிக்க இயலாது.

**மேலாவைத் துணைத் தலைவர் அதிகாரம் (சரத்து - 184)**

- மேலவைத் தலைவர் பதவி காலியானால், அந்தப் பணிகளை மேலவைத் துணைத் தலைவர் மேற்கொள்வார். மேலவைத் துணைத் தலைவர் பதவியும் காலியானால், ஆளுநர் அவையின் வேறொரு உறுப்பினரை மேலவைத் துணைத் தலைவராக செயல்பட நியமிப்பார்.
- மேலவைத் தலைவர் வருகை தராமல் இருக்கும் காலத்தில், மேலவைத் துணைத் தலைவர் நடத்துவார், அவரும் வருகை தராமல் இருக்கும் போது,

அவையின் நடைமுறை விதிகளின் படி வேறு நபர் மேலவைத் தலைவராக செயல்பட வேண்டும்.

**சரத்து - 186**

- சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஊதியங்கள், படித்தொகைகள் மற்றும் சிறப்புரிமைகளைப் சட்டமன்றம் நிர்ணயிக்கும்.

**சரத்து - 187**

- சட்டமன்றத்தின் இரு அவைகளுக்கும் தனித்தனி செயலகங்கள் இருத்தல் வேண்டும்.

**சரத்து - 188**

- சட்டமன்றத்தின் இரு அவைகளின் ஒவ்வொரு உறுப்பினர்களும் ஆளுநர் அல்லது அவர் சார்பாக நியமிக்கப்படும் ஒருவர் (தற்காலிக சபாநாயகர்) மன்னிலையில் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**சரத்து - 189**

- சட்டமன்ற அவைகளினல் எழும் எல்லா கேள்விகளுகம் பெரும்பான்மை வாக்கெடுப்பின் முலம் நிர்ணயிக்கப்படும்.
- சபாநாயகர் முதல் வாக்கெடுப்பில் வாக்களித்தல் கூடாது. ஆனால் வாக்கெடுப்பில் சமநிலை ஏற்படின் வாக்களிக்கலாம்.
- கூட்டம் நடத்த (Quorun) 10 உறுப்பினர்கள் அல்லது பத்தில் ஒரு பங்கு (1/10) உறுப்பினர்கள் அதில் எது அதிகமோ வேண்டும்.
- கூட்டம் நடக்கும் போது, குறைந்தபட்ச உறுப்பினர்கள் இல்லாத போது தலைவர் அல்லது சபாநாயகர் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும் அல்லது இடைநிறுத்த வேண்டும்.

**சரத்து - 190**

- ஒருவர் சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக இருத்தல் கூடாது.
- ஒருவர் 2 அல்லது மேற்பட்ட மாநில சட்டமன்றத்தின் அவைகளில் உறுப்பினராக இருந்தால் அவரது அனைத்து உறுப்பினர் பதவியும் காலியாகி விடும்.
- சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவி விலகல் கடிதத்தினை சபாநாயகரிடம் அல்லது மாநிலங்களவைத் தலைவரிடம் கொடுக்க வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் பதவி விலகல் கடிதம் தன்னிச்சையாகவோ,

நியாயமானதாகவோ இல்லையென்று நினைத்தால் ஏற்றுக்கொள்ள மறுக்கலாம்.

- சட்டமன்ற அவையில் அவையின் அனுமதி இல்லாமல் தொடர்ந்து 60 நாட்கள் வருகை தராமல் இருந்தால் அவரது உறுப்பினர் பதவி காலியகிவிடும். (ஆனால் கூட்டத் தொடரில் 4 நாட்களுக்கு தொடர்ந்து ஒத்தி வைக்கப்பட்டால் அந்நாட்கள் 60 நாட்களுக்குள் கணக்கில் வராது)

**உறுப்பினர்களின் தகுதியின்மை/தகுதியிழப்பு (சரத்து - 191)**

1. மத்திய அரசு அல்லது மாநில அரசின் கீழ் ஆதாயம் தரும் பதவிகள் எதனையும் வகித்தல் கூடாது.
2. தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் மனநிலை சரியில்லாதவர்கள் என விளம்பப்பட்டவர்கள்.
3. கடன் தீர்க்க இயலாதவராக அறிவிக்கப்பட்டவர்.
4. இந்தியக் குடிமகனாக இல்லாதவர் அல்லது தாமே விரும்பி பிற நாட்டின் குடியுரிமை பெற்றவர்கள்.
5. நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் தகுதியற்றவராக அறிவிக்கப்பட்டவர். மத்திய அல்லது மாநில அரசுகளில் அமைச்சர்களாக இருப்பவர்கள் ஆதாயம் தரும் பதவி வகிப்பதாக கருதப்பட மாட்டார்கள்.
6. பத்தாவது அட்டவணையின்படி தகுதியின்மை அடைந்தால் உறுப்பினராக இருப்பதற்கும் தகுதி இழந்து விடுவார்.

**சரத்து - 192**

- கட்சித் தாவல் சட்டம் தவிர பிற சூழல்களில் தகுதியின்மை பற்றி முடிவு செய்யும் அதிகாரம் ஆளுநரிடம் உள்ளது. ஆனால் அவ்வாறு செய்வதற்கு முன் தேர்தல் ஆனணயத்தின் கருத்தினை கேட்டு அதன்படி செயல்பட வேண்டும்.

**சரத்து - 193**

- பதவிப்பிரமாணம் எடுக்காமல் அல்லது தகுதி இல்லாமல் அல்லது தகுதியின்மைக்குப் பிறகு அவையில் பங்கெடுப்பது அல்லது வாக்களித்தால் ஒருநாளுக்கு 500ரூபாய் என அபராதம் செலுத்த பொறுப்புடையவராவார்.

**சரத்து - 194**

- சட்டமன்ற உறுப்பினர் தான் சொன்ன அல்லது சட்டமன்ற அவைகள் மற்றும் அதன் உறுப்பினர்கள், குழுக்களின் அதிகாரங்கள், சலுகைகள், வாக்களித்தல்,

வெளியீடுகள், அறிக்கைகள், நடவடிக்கைகள் போன்ற ஏதேனும் செயல்களுக்கு எந்த நீதிமன்றத்திற்கும் கடமைப்பட்டவர் அல்ல.

**சரத்து - 195**

- சட்டமன்ற உறுப்பினர்களின் ஊதியம் மற்றும் படிகள் சட்டமன்றத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

**மசோதாக்களின் நிலை (சரத்து - 196)**

- பண மசோதா மற்றும் இதர நிதி மசோதாக்களைத் (Other financial bills) தவிர சாதாரண மசோதாக்களை சட்டமன்றத்தின் இரு அவைகளில் எந்தவொரு அவையிலும் அறிமுகப்படுத்தலாம்.
- சட்டமன்றத்தின் எந்தவொரு அவையில் நிலுலையிலிருக்கும் மசோதா அந்த அவை ஒத்தி வைக்கப்பட்டால் (Prorogue) காலாவதி ஆகிவிடாது.
- சட்டமேலமையில் நிலுவையில் உள்ள ஒரு மசோதா, சட்டப்பேரவையில் நிறைவேற்றப்படாத நிலையில் சட்டப்பேரவை கலைக்கப்பட்டால் அந்த மசோதா காலாவதி ஆகாது.
- ஒரு மசோதா சட்டப்பேரவையில் நிலுவையில் உள்ளபோது அல்லது சட்டப்பேவையில் நிறைவேற்றப்பட்டு சட்டமேலவையில் நிலுவையில் உள்ள போது சட்டப்பேரவை கலைக்கப்பட்டால் காலாவதி ஆகிவிடும்.

**சரத்து - 197**

- ஒரு மசோதா சட்டப்பேரவையில் நிறைவேய்யப்பட்ட பிறகு சட்டமேலவைக்கு அனுப்பப்படும்.
  (a) அந்த மசோதா மேலவையால் நிராகரிக்கப்படும்

  அல்லது

  (b) அவையில் முன்வைக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாதங்களுக்கு மேல் நிறைவேற்றப்படாமல் இருக்கும்.

  அல்லது

  (c) மேலவையால் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட மசோதா பேரவையால் ஏற்றுக் கொள்ளாது.
- சட்டப்பேரவை அந்தக் கூட்டத்தொடரிலோ அல்லது அடுத்து வரக்கூடிய கூட்டத் தொடரிலே, திருத்தங்களுடன் அல்லது திருத்தங்கள் இல்லாமலோ நிறைவேற்றி மேலவைக்கு அனுப்பும்.

- சட்டப்பேரவையால் இரண்டாம் முறையாக நிறைவேற்றப்பட்ட மசோதா சட்டமேலவைக்கு அனுப்பப்படும். அதை,
  (a) மேலவை நிராகதிக்கும்
  அல்லது
  (b) அவையில் முன்வைக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேல் நிறைவேற்றப்படாமல் இருக்கும்.
  அல்லது
  (c) திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்ட மசோதாவை பேரவை ஏற்றுக்கொள்ளாது.
- அந்த மசோதா சட்டமன்றத்தின் அவைகளால் நிறைவேற்றப்பட்டதாக கருதப்படும்.

**பண மசோதா (சரத்து - 198)**

- பண மசோதாவை சட்டமேலவையில் அறிமுகப்படுத்தல் கூடாது.
- பண மசோதாவை சட்டப்பேரவை நிறைவேற்றி பிறகு சட்ட மேலவைக்கு அதன் பரிந்துரைக்காக அனுப்பப்படும். மேலவை, மசோதா பெறப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள், தனது பரிந்துரைகளுடன் திருப்பி அனுப்ப வேண்டும்.
- அந்தப் பரிந்துரைகளை சட்டப்பேரவை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.
- சட்டப்பேரவை சட்டமேலவையின் திருத்தங்களை/பிரிந்துரைகளை ஏற்றுக்கொண்டால் பண மசோதாவானது மேலவை பரிந்துரைத்த திருத்தங்களை பேரவை ஏற்றுக்கொண்டது என இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படும்.
- சட்டப்பேரவை, சட்டமேலவையின் திருத்தங்களை/பிரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் பண மசோதாவனாது மேலவை பரிந்துரைத்த திருத்தங்களை பேரவை ஏற்றுக்கொள்ளவில்லை என இரு அவைகளாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக கருதப்படும்.

**பணமசோதா வரையறை (சரத்து - 199)**

(a) எந்த வரியின் விதிப்பும், ஒழிப்பும், குறைப்பு, மாற்றல், ஒழுங்குபடுத்தல்
(b) பணம் வாங்குவதில் ஒழுங்குமுறை அல்லது மாநில அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்ட பொறுப்புறுதி ஏதேனும்.
(c) திரட்டு நிதி (Consolidate Fund) அல்லது நிகழ்வு சார் நிதி (Contingency Fund) பணத்தை கொடுத்தல் அல்லது எடுத்தல்.
(d) மாநிலத் திரட்டு நிதியிலிருந்து பணம் ஒதுக்குதல்

(e) மாநிலத் திரட்டு நிதியிலிருந்து ஈடுகட்டப்படும் என செலவினத்தை அறிவித்தல்.

(f) மாநிலத் திரட்டு நிதி கணக்கில் அல்லது மாநில பொதுக் கணக்கில் பணத்தை பெற்றுக் கொள்ளல் அல்லது அந்தப் பணத்தின் பாதுகாப்பு அல்லது வெளியீடு அல்லது மத்திய அல்லது மாநில அரசினுடைய கணக்குகளை தணிக்கை செய்தல்.

**மசோதாக்களுக்கு ஒப்புதல் (சரத்து - 200)**

- மாநிலத்தின் சட்டப்பேரவை அல்லது இரு அவைகளும் ஒரு மசோதாவை நிவைவேற்றிய பிறகு ஆளுநருக்கு வழங்கப்படும், ஆளுநர் தனது இசைவினை அளிக்கலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம்.
- ஆளுநர், தன்னிடம் வைக்கப்பட்ட மசோதாவை பண மசோதாவாக இல்லாத போது, பரிந்துரைகளோடு திருத்தங்களோடு திருப்பி அனுப்பலாம்.
- அவ்வாறு அனுப்பப்பட்ட மசோதாவை "அவை" அல்லது "அவைகள்" கருத்தில் கொண்டு, திருத்தம் அல்லது திருத்தம் இல்லாமல் மீண்டும் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பினால், ஆளுநர் தனது இசைவை நிறுத்தி வைக்க இயலாது.
- ஆனால், அந்த மசோதா சட்டமானால், உயர் நீதிமன்றத்திற்கு அரசியலமைப்பு கொடுத்துள்ள நிலைக்கு ஆபத்து ஏற்படும்/உயர்நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைப்பதாக இருக்கும் என ஆளுநர் நினைத்தால், தனது இசைவை அளித்தல் கூடாது, குடியரசுத் தலைவரின் கருத்தை பெறுவதற்காக இருப்பு வைத்தல் வேண்டும்.

**சரத்து - 201**

ஒரு மசோதா, குடியரசுத் தலைவரின் கருத்தைப் பெற ஆளுநரால் நிறுத்தி வைத்தால், குடியரசுத் தலைவர் இசைவு அளிக்க வேண்டும் அல்லது நிறுத்தி வைக்க வேண்டும்.

ஆனால், அந்த மசோதா பண மசோதாவாக இல்லை எனில், அதை திரும்ப அனுப்ப குடியரசுத் தலைவர் கூறலாம். திருப்பி அனுப்பப்பட்ட மசோதாவை, "அவை" அல்லது "அவைகள்" 6 மாதத்திற்குள் கவனத்தில் கொள்ள வேண்டும். மீண்டும் நிறைவேற்றப்பட்டு அனுப்பினால், அதை மீண்டும் குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.

**ஆண்டு நிதிநிலை அறிக்கை (சரத்து - 202)**

- ஆண்டு நிதிநிலை அறிக்கை ஒரு பண மசோதா.

- ஆளுநரின் பரிந்துரைக்குப் பிறகு தாக்கல் செய்யப்படும் ஆண்டு நிதிநிலை அறிக்கை சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்படும்.
- ஆண்டு நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றத்தின் இரண்டு சபைகளிலும் சமர்ப்பிக்கச் செய்வது ஆளுநரின் கடமையாகும்.
  இவ்வறிக்கையானது வரவிருக்கும் நிதி ஆண்டின் திட்டமிடப்பட்ட வருமானம் (Estimated receipts/income) மற்றும் செவவினங்களைக் குறித்த விபரங்களைத் தருகிறது.
- திட்டமிடப்பட்ட செலவினங்கள் இரு வகைப்படும்.
  (a) மாநிலத் திரட்டு நிதியிலிருந்து (CFS) செய்யப்பட வேண்டிய செலவினங்கள்.
  (b) மாநிலத் திரட்டு நிதியிலிருந்து செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள பிற செலவினங்கள்.
- மாநிலத் திரட்டு நிதியிலிருந்து சட்டமன்ற வாக்கெடுப்பு இல்லாமல் செய்யக்கூடிய செலவினங்கள் (Charged Expendure) / செலவிடத்தக்க செலவினங்கள்.
  (a) ஆளுநரின் ஊதியம் மற்றும் படிகள், அவரது அலுவலகம் தொடர்பான செலவினங்கள்.
  (b) சட்டமேலவைத் தலைவர், மற்றும் துணைத் தலைவர் (Vice - Chairman). சட்டப்பேரவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் ஆகியோரின் ஊதியம் மற்றும் படிகள்.
  (c) இந்திய அரசின் கடன் பொறுப்புகள்
  (d) உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியம் மற்றும் படிகள்.
  (e) நீதிமன்றம் அல்லது இசைவுத் தீர்ப்பாயம் ஏதேனும் வழங்கிய தீர்ப்பு, தீர்ப்பாணை அல்லது முடிவின்படி செலுத்தப்பட வேண்டிய தொகை.
  (f) அரசியலமைப்புச் சட்டம் அல்லது சட்டமன்றச் சட்டம் அறிவிக்கும் பிற செலவினங்கள்.

**சரத்து - 203**

- மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து, ஓட்டெடுப்பிற்கு உள்ளாகாத செலவினங்களை சட்டப் பேரவையில் ஓட்டெடுப்பிற்கு உட்படுத்தக் கூடாது. ஆனால் விவாதிக்கலாம்.
- மற்ற திட்டமிடப்பட்ட செலவினங்கள் மானியக் கோரிக்கைகளாக சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்படும். அந்த "அவை" ஒப்புதல் அளித்தல், ஒப்புதல் அளிக்க மறுத்தல், பணத்தை குறைத்து கோரிக்கைக்கு ஒப்புதல் வழங்கும்.
- ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் மானியக் கோரிக்கையை எழுப்ப முடியாது.

**பணம் ஒதுக்கு மசோதாக்கள்** (Appropriation Bills) (**சரத்து** - 204)

- மானியக் கோரிக்கைகளுக்கு பிறகு மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து எடுக்க பணஒதுக்கு மசோதா அறிமுகப்படுத்த வேண்டும்.
  - (a) பேரவையில் எழுப்பப்பட்ட மானியங்கள்
  - (b) மாநில தொகுப்பு நிதியிலிருந்து ஒட்டெடுப்பிற்கு உள்ளாகாத செலவினங்கள்.
- இம்மசோதாவில் திருத்தம் செய்யக் கூடாது.
- பணம் ஒதுக்கு மசோதா நிறைவேற்றாமல் மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து பணம் எடுத்தல் கூடாது.

**துணை, கூடுதல், அதிகப்படியான மானியம்** (**சரத்து** - 205)

- **துணை மானியம்:** ஒரு குறிப்பிட்ட பணிக்கு நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட பணம் போதுமானதாக இல்லையெனில் ஒதுக்குவது.
- **கூடுதல் மானியம்:** ஒரு புதிய பணிக்கு தேவைப்படும் கூடுதல் செலவினங்களுக்காக ஒதுக்குவது.
- **அதிகப்படியான மானியம்:** ஏதேனும் ஒரு பணிக்கு அனுமதித்ததை விட கூடுதலாக செலவு செய்துவிட்டால் ஒதுக்குவது.

**சரத்து - 206:** vote on account, votes of credit and exceptional grants

**நிதி சோதா** (**சரத்து** - 207)

- பண மசோதா அல்லது திருத்தம் தொடர்பானவைகள் ஆளுநரின் பரிந்துரை இல்லாமல் அறிமுகம் செய்தல் கூடாது.
- ஒரு நிதி மசோதாவை மேலவையில் அறிமுகப்படுத்த முடியாது.
- ஒரு வரியை குறைப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு ஆளுநரின் பரிந்துரை தேவையில்லை.

**நடைமுறை விதிகள்** (**சரத்து** - 208)

- மாநில சட்டமன்ற அவை, அதன் நடைமுறை செயல்களுக்கு விதிகளை உருவாக்கிக் கொள்ளலாம்.
- சட்டமேலவை இருக்கும் மாநிலங்களில், ஆளுநர் சட்டப்பேரவை சபாநாயகரையும், மேலவைத் தலைவரையும் கலந்தாலோசித்த பிறகு, இரு அவைகளுக்கிடையேயான தொடர்பு குறித்த நடைமுறை விதிகளை உருவாக்கலாம்.

**சட்டமன்றத்தில் பயன்படுத்தப்படும் மொழி** (**சரத்து** - 210)

- சட்டமன்றத்தில் நடவடிக்கைகள் அலுவலக மொழி அல்லது மாநில மொழி அல்லது இந்தி அல்லது ஆங்கலம் வழியாக நடைபெற வேண்டும்.
- ஆனால், சபாநாயகர் அல்லது மேலவைத் தலைவர், உறுப்புனர் மேற்சொன்ன மொழிகளுள் வெளிப்படுத்த இயலாதபோது தாய்மொழியில் பேசுவதற்கு அனுமதி அளிக்கலாம்.

**விவாதம் மேற்கொள்ள கட்டுப்பாடு (சரத்து - 211)**

- மாநில சட்டமன்றத்தில், உச்சநீதிமன்ற அல்லது உயர்நீதிமன்ற நீதிபதிகளின் அலுவலக நடவடிக்கைகள் அல்லது நடத்தை தொடர்பாக விவாதம் மேற்கொள்ள கூடாது.

**சட்டமன்ற நடவடிக்கைகளை நீதிமன்றகள் விசாரிக்கத் தடை (சரத்து - 212)**

- சட்டமன்ற நடவடிக்கைகளை ஒழுங்காக மேற்கொள்ளவில்லை என்ற காரணத்திற்காக செல்லாது என கூறமுடியாது.
- அரசியலமைப்பின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள சட்டமன்ற அதிகாரி அல்லது உறுப்பினர் நடைமுறை ஒழுங்கு, அலுவலக நடப்பு, ஒழுங்குமுறை காக்க தங்கள் அதிகாரத்தை பயன்படுத்தியது தொடர்பாக எந்தவொரு நீதிமன்ற வரம்பிற்குள்ளும் பொறுப்பாகாது.

**சட்டமன்றத்தின் பணிகள்**

- மாநில சட்டமன்றம், மாநிலப் பட்டியல் மற்றும் பொதுப் பட்டியலில் உள்ள துறைகளுக்கு தேவையான சட்டங்களை இயற்றுகிறது.
- நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா சட்டமாவதற்கு மேற்கொள்ளப்படும் முறையே, மாநில சட்ட மன்றங்களிலும் கையாளப்படுகிறது.
- மாநிலத்தின் நிதிச் சார்ந்த செயல்களை சட்டப்பேரவை கட்டுப்படுத்துகிறது.
- சட்டமன்றத்தின் அனுமதியின்றி புதிய வரிகளை விதிக்க முடியாது.
- சட்ட மேலவையை விட சட்டப்பேரவை அதிகாரமிக்கது. நிதி ஒதுக்கீட்டுச் சட்டவரைவு சட்டப்பேரவையில் (கீழவை) மட்டுமே அறிமுகப்படுத்தப்படுகிறது.
- நிதிமசோதா கொண்டுவரும்போது ஐந்து நிலைகளாக மூன்று முறை படிக்கப்பட்டபின், ஆளுநரின் அனுமதியுடன் இது சட்டமாகும்.
- சட்டமன்ற அவையின் நடவடிக்கைகளுக்கு அமைச்சர்கள் பொறுப்பாவார்கள்.
- பொறுப்பில் உள்ள அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும்.
- நம்பிக்கையில்லாத தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டால், அமைச்சரவை கலைக்கப்படும்.
- நிருவாகம் சட்டமன்ற நிகழ்வுக்குக் கடமைப்பட்டுள்ளது.

## உயர்நீதிமன்றம்

**மாநிலங்களில் உயர்நீதிமன்றம்**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் சரத்து - 214ன் படி, ஒவ்வொரு மாநிலத்திலும் உயர்நீதிமன்றம் அமைப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் பதிவு செய்து கொள்ளும் அதிகாரம் உள்ளது. எனவே இதனை சாட்சியப் பதிவேடு (Court of Record) செய்யலாம். மேலும் நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக தண்டனை வழங்கக்கூடிய அதிகாரம் உள்ளிட்ட அனைத்து அதிகாரங்களும் உள்ளது (சரத்து - 215).
- பொதுவாக ஒவ்வொரு மாநிலத்திலும் மற்றும் யூனியன் பிரதேசத்திலும் உயர்நீதிமன்றம் இருக்கும். நாடாளுமன்ற சட்டங்களின் அனுமதியின் பேரில் இவை செயல்படுகிறது.
- மாநிலத்திலுள்ள பிற நீதிமன்றங்கள் உயர்நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகிறது. உயர்நீதிமன்றத்தால் கொண்டு வரப்படும் மேல்முறையீடு வழக்குகளை இந்திய உச்சநீதிமன்றம் விசாரிக்கும்.
- உயர்நீதிமன்றம், ஒரு தலைமை நீதிபதியையும், குடியரசுத் தலைவரால் நிர்ணயிக்கக்கூடிய பிற நீதிபதிகளையும் கொண்டுள்ளது (சரத்து - 216).
- இவர்களை இந்தியக் குடியரசுத் தலைவர் நியமனம் செய்கிறார் (சரத்து - 217).
- பொதுவாக பணி மூப்பின் அடிப்படையிலேயே தலைமை நீதிபதியின் நியமனம் அமைகிறது. உயர்நீதிமன்றத்தின் பிற நீதிபதிகளையும் குடியரசுத் தலைவரே நியமனம் செய்கிறார்.
- ஒரு உயர்நீதிமன்ற நீதிபதி பதவி விலக விரும்பினால் அக்கடிதத்தினை குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும்.
- உயர்நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால் உச்சநீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்யும் முறையில் செய்யலாம்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளை உச்சநீதிமன்ற நீதிபதியாகவோ மற்றொரு உயர் நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யவோ அதிகாரம் படைத்தவர் குடியரசுத் தலைவர்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகளின் வயது தொடர்பான பிரச்சனைகக் எழுந்தால் இந்தியத் தலைமை நீதிபதியிடம் ஆலோசனை பெற்ற பிறகு குடியரசுத் தலைவர் முடிவு செய்வார். அவ்வாறு எடுக்கும் முடிவு இறுதியானது.

**நீதிபதிகளின் தகுதி (சரத்து - 217)**

- இந்தியக் குடிமகனாக இருத்தல் வேண்டும்.

- உயர்நீதிமன்றங்களில் வழக்குரைஞராக குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

அல்லது

- குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் கீழமை நீதிமன்றத்தில் பணியாற்றியிருக்க வேண்டும்.
- நீதிபதிகள் ஒய்வு பெறும் வயது 60என்ற வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1963 - ஆம் ஆண்டுகள் கீழமை நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
- நீதிபதிகள் ஒய்வு பெறும் வயது 60என்று வரையறுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1963 - ஆம் ஆண்டு அரசியலமைப்பு 15 வது திருத்தப்படி உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஒய்வு பெறும் வயது 62 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படும் ஒருவர் அந்த மாநிலத்தின் ஆளுநர் முன்னிலையில் பதவி பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் (3 - வது அட்டவணை) (சரத்து - 219)
- உயர் நீதிமன்ற நிரந்தர நீதிபதியாக பணியாற்றி ஓய்வு பெற்ற பிறகு உச்சநீதிமன்றம் மற்றும் மற்ற உயர்நீதிமன்றங்கள் தவிர வேறெங்கும் வழக்குரைஞராக வாதாட முடியாது (சரத்து - 220).
- உயர்நீதிமன்ற நீதிபதிகளின் ஊதியத்தை நிர்ணயம் செய்வது நாடாளுமன்றம் ஆனால் அந்த ஊதியம், ஓய்வூதியம் மற்றும் பிற வசதிகளை குறைக்க முடியாது. (நிதி நெருக்கடி காலங்கள் தவிர) (சரத்து - 221)
- உயர் நீதிமன்ற நீதிபதிகளை ஒரு நீதிமன்றத்திலிருந்து மற்றொரு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்வது குடியரசுத் தலைவர். (இந்தியத் தலைமை நீதிபதியின் ஆலோசனைக்கு பிறகு) (சரத்து - 222)

தற்காலிக தலைமை நீதிபதி (சரத்து - 223)

ஒரு உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது அந்த தலைமை நீதிபதி தனது வேலையை செய்ய இயலாத பொழுது அந்த நீதிமன்றத்தின் ஒரு நீதிபதியைத் தற்காலிக தலைமை நீதிபதியாகச் செயல்படுமாறு குடியரசுத் தலைவர் நியமிக்கலாம்.

**கூடுதல் அல்லது தற்காலிக நீதிபதி (சரத்து - 224)**

உயர் நீதிமன்றத்தின் வேலை அதிகமானதின் காரணத்தினாலோ அல்லது வேலை தேங்கல் காரணமாகவோ, நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டும் என்றாலோ தகுதி வாய்ந்த நபர்களை இரண்டு ஆண்டுகளுக்கு மிகாமல் கூடுதல்

நீதிபதிகளாக நியமிப்பவர் குடியரசுத் தலைவர் ஆனால் 62 வயதிற்கு மேற்பட்ட ஒருவரை கூடுதல் அல்லது தற்காலிக நீதிபதியாக நியமிக்க கூடாது.

உயர்நீதிமன்ற நீதிபதி (தலைமை நீதிபதி தவிர) வருகை தராமலோ அல்லது வேறு காரணங்களுக்காக அலுவலக வேலை செய்ய இயலாத நிலை அல்லது தலைமை நீதிபதியாக தற்காலிகமாக செயல்பட நியமிக்கப்பட்டிருந்தாலோ, குடியரசுத் தலைவர் தகுதிவாய்ந்த நபரை நிரந்தர நீதிபதி பணிக்குத் திரும்பும் வரை நீதிபதியாக செயல்பட நியமிக்கலாம்.

ஓய்வு பெற்ற நீதிபதிகளை நியமிப்பது (சரத்து - 224 - A)

- உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி குடியரசுத் தலைவர் முன் ஒப்பம் பெற்று ஓய்வு பெற்ற நீதிபதிகளை தற்போது நீதிபதியாகச் செயல்படுமாறு வேண்டலாம். அவ்வாறு நியமிக்கப்படும் நீதிபதிக்கு சலுகை, ஊதியம் நிர்ணயம் செய்வது குடியரசுத் தலைவர் ஆனால் உயர்நீதிமன்ற நீதிபதியாகக் கருதப்பட மாட்டர்
- ஓய்வு பெற்ற நீதிபதிகளை நீதிபதியாகச் செயல்பட கட்டாயப்படுத்த முடியாது.

**உயர் நீதிமன்றங்களின் நீதிபேராணை வழங்கும் அதிகாரம் (சரத்து - 226)**

- ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தன் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கலாம்.
- இந்த அதிகாரம் உச்சநீதிமன்றத்தின் நீதிப்பேராணை வழங்கும் அதிகாரத்தினைப் பாதிக்காது.
- பகுதி III இல் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை செயல்படுத்த அல்லது வேறு காரணங்களுக்காக ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை, நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை, தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை உள்ளிட்ட நீதிப் பேராணைகள் அல்லது ஆணைகள் பிறப்பிக்கலாம்.

மேற்பார்வை அதிகாரம் (சரத்து - 227)]

- ஒவ்வொரு உயர்நீதிமன்றமும் தனது அதிகாரப் பரப்பெல்லைக்குட்பட்ட அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை மேற்பார்வையிட அதிகாரம் கொண்டுள்ளது.
- நீதிமன்ற நடைமுறைகள் தொடர்பான பொதுவிதிகளை உருவாக்கலாம். கணக்குகள் நீதிமன்ற அதிகாரிகள் வைத்துள்ள பதிவுகள் மற்றும் அதன் முறைகள் தொடர்பாக.

- ஆனால், ராணுவ சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயங்கள் மீதான மேற்பார்வை அதிகாரத்தை உள்ளடக்காது.

வழக்கினை உயர்நீதி மன்றத்திற்கு மாறுதல் செய்தல் (சரத்து - 228)

தனக்கு கீழ் உள்ள நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கின் சட்டத் தொடர்பான வினாக்கள் இருக்கிறது என்று உயர்நீதிமன்றம் நினைத்தால் அந்த வழக்கினை உயர்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யலாம்.

தானே விசாரிக்கலாம் அல்லது சட்ட வினாவை நிர்ணயித்து, தீர்ப்புரையின் நகல் இணைத்து எந்த நீதிமன்றத்திலிருந்து வழக்கு திரும்பப் பெறப்பட்டதோ அங்கேயே திருப்பு அனுப்பி வைக்கலாம்.

**சரத்து - 229**

- உயர்நீதிமன்றத்தின் அதிகாரிகள் மற்றும் பணியாட்களை நியமிப்பது உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி.
- பணி நிபந்தனைகள் தொடர்பான விதிகளை வகுப்பது உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, ஆனால் ஊதியம், வசதிகள், விடுப்பு, ஓய்வூதியம் தொடர்பான விதிகள் மாநில ஆளுநரின் ஒப்புதல் பெற வேண்டும்.
- ஊதியம், வசதிகள், ஓய்வூதியம் உள்ளிட்ட உயர்நீதிமன்ற நிர்வாக செலவினங்கள் அனைத்து மாநில தொகுப்பு நிதியத்திலிருந்து எடுக்கப்படும் விதிக்கப்படும் (Charged) செலவினங்கள்.

**சரத்து - 230**

- உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை யூனியன் பிரதேசத்திற்கு நீட்டிப்பு செய்வதற்கும், விடுவிப்பு செய்வதற்கும் அதிகாரம் படைத்தது நாடாளுமன்றம்.

**சரத்து - 231**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு அல்லது யூனியன் பிரதேசத்திற்கு பொதுவான ஒரு உயர் நீதிமன்றத்தினை உருவாக்க அதிகாரம் படைத்தது நாடாளுமன்றம்.

**கீழமை நீதிமன்றங்கள்**

உயர்நீதிமன்றத்தினை ஆலோசனை செய்த பிறகு மாவட்ட நீதிபதிகளை நியமிப்பவர் ஆளுநர். ஆனால் அவ்வாறு நியமிக்கப்படும் மாவட்ட நீதிபதி ஏழு

ஆண்டுகளுக்கு குறைவில்லாமல் வழக்குரைஞராகவும் மற்றும் உயர்நீதிமன்றம் பரிந்துரையும் செய்ய வேண்டும் (சரத்து - 233).

**உயர்நீதிமன்றத்தின் அதிகாரங்களும், செயல்பாடுகளும்**

உயர்நீதிமன்றத்தின் அதிகார வரம்பினை இரண்டு விதமாகப் பிரிக்கலாம்

**1.முதல் விசாரணை நீதி அதிகாரம்**

- உயர்நீதிமன்றங்களின் முதல் விசாரணை அதிகாரம் வரையறைகளுக்கு உட்பட்டது.
- அரசியலமைப்பின் 226 - வது சரத்தின்படி, அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்தவோ, அல்லது வேறுசில குறிப்பிட்ட நோக்கங்களுக்காகவோ நீதிப் பேராணையினை பிறப்பிக்க முடியும்.
- இந்த முதன்மை நிலை அல்லது நேரடி அதிகாரத்தில் நிருவாகம், திருமணம் தொடர்பான வழக்குகள், கம்பெனிச் சட்டம், நீதிமன்ற அவமதிப்பு போன்ற வழக்குகள் அடங்கும்.
- உச்சநீதிமன்றத்தைப் போலவே உயர்நீதிமன்றமும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆட்கொணர் நீதிப்பேராணை, செயலுறுத்தும் நீதிப்பேராணை, தடைப்பேராணை, ஆவணக்கேட்புப் பேராணை, தகுதி முறை வினவும் நீதிப்பேராணை ஆகிய ஆணைகளைப் பிறப்பிக்க முடியம்.

**2. மேல் முறையீடு அதிகார வரம்பு**

- கீழ் நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்படும் சிவில் மற்றும் குற்றவழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கலாம்.
- அரசியரலமைப்பு சட்ட விரிகளின் விளக்கங்கள் தொடர்பான வழக்குகளையும், உயர்நீதிமன்றம் விசாரிக்கலாம். இத்தகைய நீதிமன்ற அதிகார வரம்பிற்குள், உயர்நீதிமன்றம் முழுமையாகவும், சுதந்திரமாகவும் செயல்படுகிறது.
- கீழ் நீதிமன்றங்களிலிருந்து வரும் உரிமையியல், முதல்நிலை அல்லது இரண்டாம் நிலை வழக்குகளை உயர்நீதிமன்றம் விசாரிக்கலாம். குற்றவியல் வழக்குகளில் உயர்நீதிமன்றம், கீழ் நீதிமன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிராகவும் செயல்படும்.

**நிருவாகப் பொறுப்புகள்**

- மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை உறுதி செய்வதற்காக பல நிலைகளிலான நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள் என்று அழைக்கப்படுகின்றன. சார்பு நீதிமன்றங்களை உயர்நீதிமன்றம் கண்காணிக்கிறது.

- சார்பு நிலை நீதிமன்றங்கள் உயர்நீதிமன்றத்தின் விதிகளையும், ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். கீழ்மட்ட நீதிமன்றங்களின் கோப்புகளை உயர்நீதிமன்றம் ஆய்வு செய்யும்.
- ஒரு சார்பு நீதிமன்றத்திலிருந்து வழக்கை மாற்றும் அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு உள்ளது.

**சட்டத்தை நீதிமன்ற மறுபரிசீலனை செய்யும் அதிகாரம்**

- சட்டமன்றத்தால் இயற்றப்படும் மசோதா, அரசியலமைப்புச் சட்ட விதிகளுக்கு முரணானது என்று அறியிப்பட்டால், அத்தகைய சட்டம் செல்லாது என்று அறிவிக்கின்ற உரிமை உச்சநீதிமன்றம் போல் உயர்நீதிமன்றத்திற்கும் உண்டு. இவ்வுரிமை, நிர்வாக மற்றும் சட்டமன்றங்களை வரம்பு மீறாமல் கட்டுப்படுத்துவதற்கு உதவுகிறது.
- மதுரையில் சென்னை உயர்நீதிமன்ற கிளை செயல்படுகிறது.
- மாநில நிருவாகத்தில் மூன்று பிரிவுகளும், தன்னிச்சையாக செயல்படும் பிரிவுகளாக இருந்தாலும் நிருவாகத்தில் அதிகார வரம்பை மீறி செயல்பட முடியாது. இப்பிரிவுகளில் ஏதாவது ஒரு பிரிவு அரசியலமைப்பின் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தினால் மற்ற இருபிரிவுகள் இதனை கண்காணித்து மக்களை பாதிக்காத வகையில் பாதுகாக்கிறது, இது கண்காணித்து சமநிலைப்டுத்து முறை என அழைக்கப்படுகிறது. இதன்மூலம் நிருவாகத்துறை, சட்டத்துறை, நீதித்துறை, முழுமையான சுதந்திரத்துடன் செயல்படுகிறது என்பதை தெளிவாகக் காணலாம், ஒருவர் மீது ஒருவர் ஆக்கிரமிப்பு செய்வதிலும், அதேபோல நீதித்துறை மத்திய அரசும், மாநில அரசும் தங்களின் உரிமைகளில் தலையிடுவதையும் தடுத்து பாதுகாக்கிறது,
- மாநிலங்களின் தலைமை நீதிமன்றம் உயர்நீதிமன்றம் ஆகும்.
- இந்தியாவில் 24 உயர்நீதிமன்றங்கள் உள்ளன. அவற்றுள் 3உயர்நீதிமன்றங்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்குப் பொதுவாக உள்ளன.

**இந்தியாவிலுள்ள உயர் நீதிமன்றங்கள்**

| | நீதிமன்றங்கள் | வருடங்கள் | அதிகார வரம்பு | இருப்பிடம் |
|---|---|---|---|---|
| 1 | அலகாபாத் | 11-06-1866 | உத்திரப்பிரதேசம் | அலகாபாத் (கிளை - லக்னோ) |
| 2 | ஆந்திரபிரதேசம் | 05-07-1954 | ஆந்திரப்பிரதேசம் | அய்தராபாத் |
| 3 | பம்பாய் | 14-08-1862 | மகாராஷ்டிரம், கோவா தாத்ரா நாகர் ஹவேலி டையூ, டாமன் | மும்பை (கிளை - நாக்பூர் பனார்ஜி அவுரங்கபாத்) |
| 4 | கல்கத்தா | 14-08-1862 | மேற்கு வங்காளம், | கல்கத்தா (சர்கியூட் கிளை - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | அந்தமான் நிக்கோபார் | போர்ட்பிளயர்) |
| 5 | டெல்லி | 31-10-1966 | டெல்லி | டெல்லி |
| 6 | கௌகாத்தி | 01-03-1948 | அஸ்ஸாம், நாகலாந்து, மிசோரம், அருணாச்சலப்பிரதேசம் | கௌகத்தி |
| 7 | குஜராத் | 01-05-1960 | குஜராத் | அகமதாபாத் |
| 8 | ஹிமாச்சலப் பிரதேசம் | 1971 | ஹிமாச்சலப்பிரதேசம் | சிம்லா |
| 9 | ஜம்மு காஷ்மீர் | 1943 | ஜம்முகாஷ்மீர் | ஸ்ரீநகல் & ஜம்மு |
| 10 | ஜார்கண்ட் | 15-11-2000 | ஜார்கண்ட் | ராஞ்சி |
| 11 | கர்நாடகா | 1884 | கர்நாடகா | பெங்களூர் |
| 12 | கேரளா | 1956 | கேரளா, லட்சத்தீவுகள் | எர்ணாகுளம் |
| 13 | மெட்ராஸ் | 15-08-1862 | தமிழ்நாடு & பாண்டிச்சேரி | மெட்ராஸ் (கிளை - மதுரை) |
| 14 | மணிப்பூர் | 25-03-2013 | மணிப்பூர் | இம்பால் |
| 15 | மேகாலயா | 25-03-2013 | மேகலாயா | ஷில்லாங் |
| 16 | ஒடிசா | 03-04-1948 | ஒடிசா | கட்டாக் |
| 17 | பஞ்சாப் & ஹரியானா | 08-11-1947 | பஞ்சாப், ஹரியானா சண்டிகர் | சண்டிகர் |
| 18 | பாட்னா | 02-09-1916 | பீகார் | பாட்னா |
| 19 | இராஜஸ்தான் | 21-06-1949 | இராஜதான் | ஜோத்பூர் (கிளை - ஜெய்பூர்) |
| 20 | சிக்கிம் | 1975 | சிக்கிம் | கேங்டாக் |
| 21 | உத்ரகாண்ட் | 09-11-2000 | உத்தரகாண்ட் | நைனிடால் |
| 22 | திரிபுரா | 23-03-2013 | திரிபுரா | அகர்தனா |
| 23 | சட்டிஸ்கர் | 2000 | சட்டீஸ்கர் | பிலாஸ்பூர் |
| 24 | மத்தியப்பிரதேசம் | 02-01-1936 | மத்தியப்பிரதேசம் | ஜெபல்பூர் (கிளை - குவாலியர், இந்தூர்) |